

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களை தூத்துக்குடியில் அண்மையில் கடலுக்குச் சென்ற தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தைச் சேர்ந்த 26 மீனவர்கள், தவறுதலாகக் கடல் எல்லையைத் தாண்டி மாலத்தீவுப் பகுதியில் சிக்கியுள்ளனர். அவர்களைப் பாதுகாப்பாக மீட்டு தாயகம் அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி, தருவைகுளம் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

சாலைகளில் 'டாடா' காட்டும் முதலமைச்சரால்

ரவுடிகளும் கொலை செய்துவிட்டு 'டாடா' காட்டி தப்பிக்கின்றனர்!

தூத்துக்குடி பெண்மணி கொலையை சுட்டிக்காட்டி உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.30-

அடிக்கடி சாலைகளில் 'டாடா' காட்டும் முதலமைச்சர், சட்டம் ஒழுங்கிற்கும் டாடா காட்டி விட்டதால், ரவுடிகளும் சர்வ சாதாரணமாக கொலை செய்துவிட்டு டாடா காட்டிவிட்டு தப்பித்துக் கொள்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எக்ஸ் வலைதளப் பக்கத்தில், தூத்துக்குடி பெண்மணி கொலையை சுட்டிக்காட்டி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எக்ஸ் தளப் பதிவு வருமாறு:-

இன்னும் எத்தனை கொலைகள் நடக்கும் இந்தக் கோமாளிகள் ஆட்சியில்?

தூத்துக்குடியில் வீட்டில் தனியாக



இருந்த சசிகலா என்னும் பெண்ணை மர்ம நபர் ஒருவர் வெட்டிக்கொலை செய்துள்ள சம்பவம், இந்த ஆட்சியில் மக்களுக்கு இனி எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதையே உணர்த்துகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 4 நாட்களில் 7 கொலைகள் நடந்திருப்பதற்கு காவல்துறை மற்றும் அதனை கையில் வைத்திருக்கும் டம்மி முதலமைச்சரின் தோல்வியே காரணம்.

அடிக்கடி சாலைகளில் டாடா காட்டும் முதலமைச்சர், சட்டம் ஒழுங்கிற்கும் ஒரேயடியாக டாடா காட்டி விட்டதால், ரவுடிகள் Casual-ஆக கொலை செய்துவிட்டு டாடா காட்டி தப்பிக்கின்றனர்.

பழிவாங்கவும் - பழிபோடவும் ஆலாய்ப் பறக்கும் இந்த அரை வேக்காடு ஆட்சியாளர்கள், மக்கள் பலியாவதை எப்போது தடுப்பார்கள்? Dummy CM சொன்ன Efficient Officers எல்லாம் எங்கே போனார்கள்?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

மகளிருக்கான வெற்றி இலவசப் பயணத் திட்டம்:

கடும் நிதி நெருக்கடியில் அரசு போக்குவரத்துக் கழகங்கள்!

டீசல் – உதிரிபாகங்கள் வாங்க நிதியின்றித் தவிப்பு!

சென்னை, அக். 30 -

மகளிருக்கான வெற்றி இலவச பயண திட்டத்தை செயல்படுத்த 12 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என அரசு போக்குவரத்து கழகங்கள் கோரிக்கை விடுத்த நிலையில், 6,000 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப் படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் சாதாரண கட்டண பஸ்களில் மகளிர் இலவச பயண திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது வெற்றிப் பயணம் என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி மாநகர, நகரப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண, சொகுசு பஸ்களிலும், மாவட்டங்களுக்கு இடையேயான புறநகர் மற்றும் மலைப்பகுதி சாதாரண கட்டண பஸ்களிலும் மகளிருக்கு இலவச பயணம் அனுமதிக்கப்படுகிறது.

தமிழகம் முழுதும் 12 ஆயிரத்து 695 பஸ்களில் மகளிர் கட்டணமின்றி பயணம் செய்யலாம். வெளியூர் செல்லும் ஏசி விரைவு பஸ்களைத் தவிர மற்ற பஸ்களில் பெண் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

மொத்தமுள்ள 340 பணிமனைகளில் ஒவ்வொரு போக்குவரத்து பணிமனையிலும் 1.50 லட்சம் முதல் 2 லட்சம் ரூபாய் வரை வசூல் குறைந்துள்ளது. இந்த இழப்பைச் சரிக்கட்ட அரசு சார்பில் போக்குவரத்து கழகங்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் தொடங்கிய நாள் முதல் இதுவரை போக்குவரத்து கழகங்களுக்கு அரசு ஒரு ரூபாய் கூட விடுவிக்கவில்லை. சில பணிமனைகளில் டீசல், உதிரிபொருட்கள் வாங்குவதற்குக் கூட பணம் இல்லாததால் கடும் சிரமத்தில் சிக்கியுள்ளன. இதற்கிடையே அரசு போக்குவரத்து கழகங்கள் கேட்ட தொகையில் 50 சதவீதம் மட்டுமே தர அரசு சம்மதம் தெரிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது: -

ஒரு ரூபாய் கூட இதுவரை விடுவிக்கவில்லை!

கடந்த ஆட்சியில் 7,000 சாதாரண கட்டண பஸ்களில் மட்டும் மகளிருக்கு இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. அதற்கு ஈடாக ஆண்டுக்கு 6,000 கோடி ரூபாய் தமிழக அரசு வழங்கியது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்தத் தொகையைப் படிப்படியாக விடுவித்தது.

இதனால் அரசு போக்குவரத்து கழகங்களுக்குப் பெரிய அளவில் நெருக்கடி இல்லாமல் இருந்தது. தற்போது இந்தத் திட்டத்தை வெற்றிப் பயணம் என்ற பெயரில் விரிவாக்கம் செய்து தமிழகம் முழுதும் மொத்தமாக 12 ஆயிரத்து 695 பஸ்களில் இலவச பயணம் அளிக்கப்படுகிறது.

தினமும் 84.32 லட்சம் பேர் வரை பயணம் செய்து வருகின்றனர். ஒவ்வொரு பெண் பயணியருக்கும் அவரது பயணத்தைக் கணக்கீடு செய்து டிக்கெட் தொகை வழங்க வேண்டும். பின்னர் இதற்கான தொகையைத் தமிழக அரசு விடுவிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி ஒரு ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகும் என மதிப்பீடு செய்து தமிழக அரசிடம் அறிக்கை அளிக்கப்பட்டது.

ஆனால் இந்தத் தொகையில் 6,000 கோடி ரூபாய் வரை மட்டுமே வழங்க அரசு உறுதி அளித்துள்ளது. மீதமுள்ள தொகை குறித்து அரசு எதுவும் தெரிவிக்கவில்லை. அதிலும் இதுவரை ஒரு ரூபாய் கூட விடுவிக்கவில்லை. மேலும் எப்போது வழங்கப்படும் என்பது குறித்தும் தெரிவிக்கவில்லை.

இந்தத் தொகை அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டால் பஸ்கள் இயக்குவதில் சிக்கல் ஏற்படும். எனவே பெரிய பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழக அரசு முன்கூட்டிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

சாதாரண கட்டண பஸ்கள் குறைப்பு தொடர்பாக ஆண் பயணிகள் சிலர் கூறியதாவது: -

சாதாரண பேருந்துகள் குறைப்பு!

சாதாரண கட்டண பஸ்களில் மட்டும் பெண்களுக்கான இலவச பயணம் இருக்கும்போது அந்த வகை பஸ்கள் அதிகரித்து இயக்கப்பட்டன. தற்போது கடந்த சில வாரங்களாக சாதாரண கட்டண பஸ்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ஆண் பயணிகள் வேறு வழியின்றி சொகுசு பஸ்களில் கூடுதல் கட்டணம் கொடுத்துப் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே சாதாரண கட்டண பஸ்களைக் குறைக்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும். இரவு 9:00 மணிக்கு மேல் பஸ்களின் எண்ணிக்கையும் திடீரெனக் குறைக்கப்படுகிறது. இதனால் பயணிகள் அவதிப்படுகின்றனர் என்றனர்.

மகளிருக்கான வெற்றி இலவச பயண திட்டத்தை செயல்படுத்த 12 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என அரசு போக்குவரத்து கழகங்கள் கோரிக்கை விடுத்த நிலையில், 6,000 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.



சட்டம் ஒழுங்கு சீர்கேட்டைக் கண்டித்து வரும் 31ம் தேதி தமிழ்நாடு முழுவதும் திமுக மகளிரணி சார்பில் போராட்டம் நடத்தப்படுவதை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி, ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோருடன் நடைபெற்ற கலந்தாலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினர். அருகில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை

த.வெ.க. ஆட்சியில் கட்டியதைப் போல் 'ரீல்ஸ்' போடுகிறார்கள்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!

தூத்துக்குடி, அக். 30-

தற்போதைய த.வெ.க. அரசு தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை, தாங்கள் கட்டியதுபோல் ரீல்ஸ் போட்டு திறந்து வைக்கிறது என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் மஞ்சள் நீர்க் காயலில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தற்போது திருச்செந்தூருக்கு நாளொன்றுக்கு 1.1 MLD குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், திருச்செந்தூர் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பகுதி மக்கள்தொகை அதிகரித்துள்ளதால், நாளொன்றுக்கு 3.8 MLD க்கும் அதிகமான குடிநீர் தேவைப்படுகிறது. இதனால், திருச்செந்தூரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கூடுதல் தண்ணீர் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக மஞ்சள் நீர்க்காயலில் இருந்து ஆத்தூர் வழியாகத் திருச்செந்தூருக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டத்திற்குக் கடந்த திமுக ஆட்சியின்போதே ரூ.9.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் ஆத்தூர் வரை தண்ணீர் கொண்டுவருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், அங்கிருந்து திருச்செந்தூருக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்குத் தற்போதுள்ள குழாய்களின் கொள்ளளவு போதுமானதாக இல்லை. இதனால், பல்வேறு இடங்களில் குழாய் உடைப்புகளும் நீர்க் கசிவுகளும் ஏற்படுகின்றன. எனவே, சுமார் 15 கி.மீ. நீளமுள்ள குழாய்களைச் சீரமைப்பதற்கும், தொட்டியைப் புனரமைப்பதற்கும் ரூ.30 கோடி மதிப்பிலான புதிய திட்ட முன்மொழிவு அரசிடம்



சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாதிப்பு!

இந்த முன்மொழிவை அரசு ஏற்று, விரைந்து நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை நிறைவேற்றினால் மட்டுமே திருச்செந்தூருக்குத் தேவையான அளவு குடிநீரை வழங்க முடியும். மக்களின் தேவையை கருத்தில் கொண்டு தற்போதைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், பொதுமக்களும் கோயிலுக்கு வரும் பக்தர்களும் தொடர்ந்து குடிநீர்த் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

அதேபோல், மாலத்தீவில் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக ஒன்றிய அரசிடமும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் பேசினேன். அங்குள்ள மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், படகுகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது.

பொறுப்பற்ற காவல்துறை!

தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெறும் குற்றச் சம்பவங்கள் குறித்தும் அதனை சுட்டிக்காட்டுவதும் மக்கள் பிரதிநிதிகளின் கடமை. அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே காவல்துறையின் பொறுப்பு. ஆனால் குற்றச் சம்பவங்களைத் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டிய காவல் துறை, அரசியல் விமர்சனங்களுக்குப் பதிலளிப்பதில் நேரத்தைச் செலவிடுவது வியப்பளிப்பதாக உள்ளது.

இதுமட்டுமின்றி, தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 50க்கும் மேற்பட்ட கைதிகள் சிறைகளிலிருந்து தப்பியோடியுள்ளனர். பல்வேறு குற்றச் சம்பவங்களில் தவெக நிர்வாகிகளும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் தவெக அரசு எதிர்க்கட்சியினரைக் கைது செய்வதில் காட்டப்படும் ஆர்வத்தை, குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதில் காட்டப்படுவதில்லை.

குற்றச்சம்பவங்கள் மவுனம் காக்கும் முதல்வர்!

முதலமைச்சர் தொடர்ந்து தமிழ்நாட்டில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் குறித்து மௌனம் காக்கிறார். முதலமைச்சர் விஜய் பஞ்ச் வசனங்களைப் பேசுவதற்கு மட்டுமே வாய் திறக்கிறார். சட்டமன்றத்திலும் பிற நேரங்களிலும் உரிய விளக்கங்களை அளிப்பதில்லை. மேலும், பத்திரிகையாளர்களைச் சந்தித்து கேள்விகளுக்குப் பதிலளிக்காத முதலமைச்சராக இருக்கிறார்.

தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் தற்போது திறந்து வைக்கப்படும் பல்வேறு கட்டிடங்கள் மற்றும் திட்டங்கள், திமுக ஆட்சிக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டவையாகும். ஆனால், அவை தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டவை என்பதைக்கூட குறிப்பிடாமல், தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு மாதங்களிலேயே இத்திட்டங்களைக் கட்டி முடித்ததைப் போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்கி, ரீல்ஸ்கள் வெளியிட்டு அவற்றைத் திறந்து வைத்து வருகின்றனர்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

குழுவின் தலைவர் தயாநிதிமாறன் எம்.பி. தலைமையில்

சென்னை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்புக் குழுக் கூட்டம்!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு – மேயர் பிரியா – கலாநிதி வீராசாமி எம்.பி., – பி.வில்சன் எம்.பி., – இரா.கிரிராஜன் எம்.பி., பங்கேற்பு!

சென்னை, அக். 30-

சென்னை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் குழுவின் தலைவர்/மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (28.10.2026) பெரு நகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், அம்ரூத் 2.0, சிறப்புத் திட்டங்கள், ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன், சிட்டீஸ் மற்றும் நிர்பயா, தூய்மை இந்தியா இயக்கம், தேசிய தூய்மையான காற்றுத் திட்டம், தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இந்தியன் ரயில்வே, தேசிய சமூக இணைத் திட்டம், டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), பிரதம மந்திரி முன்னோடி கிராமத் திட்டம், பி.எஸ்.என்.எல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒன்றிய அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள் குறித்தும் குழுவின் தலைவர்/மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஆய்வு செய்து, திட்ட செயல்பாடுகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் பி.வில்சன், ஆர்.கிரிராஜன், பிரவீன் சக்ரவர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் பி.கே.சேகர்பாபு (துறைமுகம்), திருமதி எம். ஆர். பல்லவி (வி.க.நகர்), துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ்.மாலதி ஹெலன், இணை ஆணையாளர் (பணிகள்) செ.சரவணன், துணை ஆணையாளர் (சுகாதாரம்) தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா, வட்டார துணை ஆணையாளர்கள் அஃதாப் ரசூல், (தெற்கு), எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), திருமதி ஸ்வேதா சுமன், (வடக்கு) நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ப. கீதா பிரியா, மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் செல்வி நிவேதா ஜெசிகா, டாக்டர் பி.எம். யாழினி, நிலைக்குழு/மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.